DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No.33/2024

PROSECUTION WITNESS L.W.9/P.W.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வக்குமார் | தகப்பனார் பெயர் | கிருஷ்ணன் |
| கிராமம் | | ஊர் | ஈரோடு |
| தொழில் | சிறப்பு உதவி ஆய்வாளர் | வயது | |

**எதிரி ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 05.08.2026

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஈரோடு கருங்கல்பாளையம் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2) ஈரோடு கருங்கல்பாளையம் காவல்நிலையத்தில் பணியாற்றிய தலைமை காவலர் திரு.அங்கப்பன் மற்றும் உதவி ஆய்வாளர் திரு.அசோகன் ஆகியோர்களின் கையொப்பம் எனக்கு பரீட்சயம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் அவர்களுக்காக நான் சாட்சியமளிக்கிறேன். கடந்த 03.06.2023 ம் தேதி, 13.00 மணிக்கு கருங்கல்பாளைய காவல்நிலைய தலைமை காவலர் திரு.அங்கப்பன் என்பவர் நிலைய அலுவலில் இருந்த போது கிருஷ்ணமூர்த்தி என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று நிலைய குற்ற எண்.202/2023 சட்டபிரிவு 387 இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **(புகார் அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

3) முதல் தகவல் அறிக்கையின் ஒரு நகலையும் அசல் புகாரையும் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களுக்கு அனுப்பியும், ஒரு நகலை புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் திரு.அசோகன் அவர்களுக்கு அனுப்பி வைத்ததை அவர் எடுத்துக் கொண்டு, அன்றைய தினமே, மதியம் 14.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் முகமது இஸ்மாயில், ரஜாக் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம்**

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.08.05 17:46:49 +0530

**அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

4) வழக்கு சாட்சிகள் கிருஷ்ணமூர்த்தி, நாகராஜ், முகமது இஸ்மாயில், ரஜாக் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரியை தேடியபோது, ஈரோடு, மூலப்பட்டறை பஸ் ஸ்டாப் அருகே நின்று கொண்டிருந்த எதிரியை தகவலாளி அடையாளம் காட்ட அவரை பிடித்து விசாரிக்க தனது பெயர் கோட்டை கார்த்திக் (எ) கார்த்திக் என கூறி குற்றத்தை ஒப்புக் கொண்டவரை சாட்சிகள் சபரி மற்றும் மோகன்ராஜ் ஆகியோர் முன்னிலையில் கைது செய்து, விசாரித்தபோது எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து சாட்சி கையொப்பம் பெற்றுள்ளார்.

4) பின் எதிரியுடன் நிலையம் வந்து கைது செய்யப்பட்ட எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். இத்துடன் தனது புலன் விசாரணை முடித்து எதிரி மீது சட்டபிரிவு 387 இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் சொன்ன தேதி நேரத்தில் புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதி நேரத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கை சரியாக விசாரிக்காமல் பொய்யாக எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**
**இல்லை.**

Taken Down Before Me and Typed By the Typist in Open Court Read Over/ Interpreted to the witness/deponent and Admitted by the witness/deponent to be correct.

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.08.05 17:46:54 +0530

Judicial Magistrate No.I,
Erode.